[1982 பிப்ரவரி 16

வறட்கிப் பகுதிகளிலுள்ள கால்நடைகளுக்கு நோய் வராமல் தடுக்க மேற்கொண்ட நடவடிக்கை

* வினா எண். 200 திரு. வி. வி. சுவாமிநாதன், திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் உள்ள கால்நடைகளுக்கு நோய் வராமல் தடுப்பதற்காக அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

(ஆ) அதற்காக அரசு ஒதுக்கீடு செய்த தொகை எவ்வளவு?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: அ. வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் கால்நடைகளுக்கு ''கோமாளி நோய்'' (Foot and moul.h Disecase[தடுப்பூசியை இலவசமாக போடு வதற்கும் குணப்படுத்தும் மருந்தை வாங்கி விநியோகம் செய்ய வும் அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

ஆ. 1. கோமாளி நோய் தடுப்பு மருந்துக்காக. ரூ. 15.40 இலட்சம்

2. குணப்படுத்தும் மருந்துக்காக. ரூ. 50,00 இலட்சம்

திரு. செ. இராமலிங்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் கால்நடைகளுக்கு தீவனம் இல்லை என்று கருதிய அரசு, தஞ்சை மாவட்டத்தில் நத்தம்பாளையத்தில் ஏராளமான அளவு வைக்கோலை வாங்கி வைத்திருக்கிறது இவை டெண்டர் கோரி முறையாக வாங்கப் பட்டதா அல்லது அதிகாரிகள் தன்னிச்சையாகவே இதை வாங்கி யிருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங் களில் மாட்டுத் தீவனத்தை வாங்கி வினியோகம் செய்வதற்கென்று 20 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வழங்கப் பட்டுள்ளது. அது டெண்டர் மூலமாக வாங்கப்பட்டதா? அதிகாரிகள் மூலமாக வாங்கப்பட்டதா என்று என்னிடம் குறிப்பு இல்லை. தனிக்கேள்வி போட்டால் விரிவாகப் பதில் அளிக்கப் படும்.

திரு. இரெ. இராசமாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறங்களில் இயங்கிவருகிற கால்நடை பராமரிப்பு நிலையங்களில் பணியாற்றக்கூடிய பணியாளர்கள் இல்லாமல், இன்றைய தினம் அங்கே கால்நடைகள் நோயால் இறந்து வருகின்றன என்று சொல்லப்படுகிறதே, ஆகவே உடனடியாக அப்படிப்பட்ட இடங்களில் கால்நடை ஆய்வாளர் களை நியமிக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்? என் தொகுதியில் நக்கன்பட்டியில் ஏராளமான கால்நடைகள் இறந்து வருகின்றன. அதற்கு அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா?

1982 பிப்ரவரி 16]

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மூலக் கேள்வி, வறட்சி பகுதிகளிலுள்ள கால்நடைகளுக்கு நோய் வராமல் தடுக்க மேற்கொண்டுள்ள நடவடிக்கை பற்றியதாகும். கால்நடை ஆய்வாளர்கள் பற்றி அல்ல. ஆகவே தனிக் கேள்வி போட்டால் விடை அளிக்கலாம்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் உள்ள மாடுகளுக்கு காணை நோய் என்ற நோய் வருகிறது. அதற்கு சிகிச்சை செய்ய மருந்தகத்திற்குப் போனால் அதற்கான மருந்து இல்லை என்று சொல்லப்படுகிறது. அது உண்மையா? அப்படி இருந்தால் அப்பேர்ப்பட்ட பகுதிகளில் உடனடியாக மருந்துகள் கொடுக்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: கால்நடை மருந்தகங்களைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு ஆண்டும் குறிப்பிட்ட அளவு மருந்துகள் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எங்கேயாவது கால்நடைகளுக்கு மருந்துகள் கிடைக்கவில்லை என்று கூறுவார்களானால் அதைப் பற்றி நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. உ. சுப்பிரமணியன்: வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள கால்நடைகளுக்கு நோய்கள் வராமல் தடுக்க மருந்துகளுக்கு அரசு பணம் ஒதுக்கியிருப்பதாகச் சொன்னார்கள். ஆனால் பலயிடங்களில் விவசாயிகளே தனிப்பட்ட முறையில் மருந்துகள் வாங்கி வரும்படி கூறப்படுகிறார்கள். கால்நடை மருந்தகங்களில் உள்ள மருந்துகள் திருட்டுப் போவதாகச் சொல்லப்படுகிறது. இது பற்றி புகார் வந்ததா? அதன்பேரில் என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: எந்தயிடங்களில் திருட்டுப் போகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவார்களானால் அது பற்றி நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]